# செயல்திட்ட நடவடிக்கை -2

**TA5123**

# புத்தகம் - எழுதுதல் - வாசித்தல்

## நோக்கங்கள் :

1. மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
2. மாணவர்களின் சுயசார்புச் சிந்தனையை வளர்த்தல்
3. மாணவர்களின் சூழல் சார் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல்
4. மாணவர்களின் எழுதுதல் திறன்களை வளர்த்தல்

## செயல்பாட்டுப் படிநிலைகள்:

1. ஒவ்வொரு மாணவரையும், பள்ளி அல்லது வீட்டுக்கு அருகில் உள்ள ஏதாவது ஒரு மரத்தின் பாகங்களை வரைந்து அவற்றின் பயன்களை ஒரு தனித்தாளில் எழுதிவரச் சொல்லுதல். மாணவர்கள் ஒவ்வொருவரையும் வெவ்வேறு மரங்களை வரையச் செய்வது நலம்.
2. பள்ளி அல்லது வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தில் காணப்படும் பறவைகள் மற்றும் பிற உயிரினங்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதி வரச் சொல்லுதல்.
3. மாணவர்கள் எழுதி வந்தவற்றை வகுப்பில் வாய்விட்டுப் படிக்கச் செய்தல். எளிய வினாக்கள் மூலம் மாணவர்கள் அனைவரையும் உரையாடலில் பங்குபெறச் செய்தல்.
4. மாணவர்கள் அனைவரும் வெவ்வேறு மரங்களின் பாகங்களைப் பற்றியும், பயன்களைப் பற்றியும் எழுதி ஒப்படைத்த தனித்தாள்களைத் தொகுத்துப் புத்தகமாகத் தயார் செய்தல்.

**மாதிரி ஒப்படைப்பு :**

| **மரத்தின் பெயர்** | **மரத்தின் பாகங்கள்** | **பயன்கள்** | **மரத்தில் காணப்படும் பறவைகள் / பிற உயிர்கள்** |
|---|---|---|---|
| வாழை | இலை | வாழை இலை உணவைப் பரிமாறப் பயன்படுகிறது. | தேனீ |
| | தண்டு | வாழைத் தண்டு உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. | பூச்சிகள் |

### ***மாணவர்களுக்கானத் திறன் தேர்வு***

***மேற்குறிப்பிட்ட செயல்திட்ட நடவடிக்கையை வகுப்பறையில் செய்து அதன் மூலம் மாணவர்கள் உருவாக்கிய படைப்புகளை, புகைப்படங்களை மற்றும் வீடியோக்களை எங்களுக்கு அனுப்புங்கள். சிறந்த படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.***